# பலபிடிய பிரதேச சபை

## காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

--------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பலபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வீதவரி வருமானம் ரூபா 286,274 இனால் மிகையாகவும் எழுத்தாணை கட்டணம் மற்றம் தண்டப்பண வருமானம் ரூபா 286,274 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்புக்கள் என உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 26,818,793 தொகையினை அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பகிர்வு செய்யப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊளியர்கள் தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூபா 7,337,002 இற்காக நிதிக் கூற்றுகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) டிரக்டர் ஒன்றின் பெறுமதியான ரூபா 1,463,200 இனை பொறியும் பொறித்தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 4,664,615 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 37,600,413 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளதுவரை பேணப்பட்டுள்ள கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்தும சான்றிதழ்கள், காலப்பகுப்பாய்வுகள் மற்றும் சமப்படுத்தப்பட்ட வைப்பு பதிவேடு தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,932,475 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,909,912 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 வீதவரி

---

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை மீதி ரூபா 13,589,347 ஆகக் காணப்பட்டதுடன் 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 155 மற்றும் 158 ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்து நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்

---------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 567,291 இற்கான வாடகை மற்றும் ரூபா 206,780 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 155 மற்றும் 159 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 540,493 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 48,868,394 இற்கான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 கடை வாடகை

----------------------

(அ) அஹுங்கல்ல பொதுச் சந்தை தொடர் கட்டடத்தில் கடைகள் வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக 2014 பெப்ரவரி மாதத்தில மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பத்தில் நிலுவை கடை வாடகை ரூபா 261,287 காணப்பட்டது.

(ii) பொது சந்தை தொடர்க் கட்டிடத்தில் 18 சில்லறைக் கடைகள் 04 மீன் கடைகள் காணப்பட்ட போதும் அவற்றில் 14 கடைகள் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது. கடைகள் வாடகை வழங்குதல் தொடர்பான வாடகை உடன்படிக்கை காலம் முடிவடைந்து காணப்பட்டது.

(iii) 11 சில்லறை கடைகளின் வாடகை உடன்படிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. உள்ளுராட்சி ஆணையாளரினால் 2012 திசெம்பர் 27 திகதி வெளியிட்டிருந்த இலக்கம் தபபா/பபாகோ/2010/01 கொண்ட சுற்று நிருபத்தின் அறிவுரைகளின் பிரகாரம் அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டும் அத்துடன் 05 வருடங்களுக்கு ஒரு முறை புது பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(iv) சந்தையின் முன் பகுதியில் காணப்படும் பாதைக்கு போடப்பட்டுள்ள மதகு மற்றும் வடிகால் முறைமையின் மூலம் நீர் ஓட்டமாக வடிந்து செல்லாமையால் மழை காலங்களில் கடைகள் நீர் நிறையும் நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக கடைகளை வாடகைக்கு பெற்றோர் முறைப்படி வாடகை செலுத்தாமை, பாதைக்கு முன்பகுதியில் காணப்படாத கடைகளுக்கு விண்ணப்பதாரிகள் முன்வராமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழக்க நேரிட்டுள்ளது.

(ஆ) பலப்பிட்டி பொதுச் சந்தை தொடர்பாக 2014 பெப்ரவரி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 பெப்ரவரி மாதம் வரை 28 கடைகளில் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 854,115 ஆகும்.

(ii) உள்ளுராட்சி ஆணையாளரினால் 2012 திசெம்பர் 27 திகதி வெளியிட்டுள்ள இலக்கம் 2010/01 கொண்ட சுற்று நிருபத்தின் அறிவுரைகளின் பிரகாரம் அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்படவேண்டும். அத்துடன் 05 வருடங்களுக்கு ஒரு முறை புதிதாக பெறுமதி மதிப்பீடு மேற் கொள்ளப்பட வேண்டும் எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பம் வரை 23 கடைகள் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

2.3 மிகை விதிப்புக்கள்

-----------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் 1983 ஆண்டின் போது விதிக்கப்பட்ட 08 மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 178,610 தொகையொன்று அறவிடவேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

--------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் சபையின் அனைத்து அங்கத்தவர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பிக்க வேண்டும், எனினும் மந்திரிமாரினால் 2013 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை. அதே போல் 2012 ஆண்டிற்காக 07 மந்திரிமார் மற்றும் 2011 ஆண்டிற்காக 07 மந்திரிமாரினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்பித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அஹுங்கல்ல பொது நூலகக் கட்டடம் நிர்மாணித்தல்

------------------------------------------------------------------------------

இந்த நிர்மாண வேலைகள் 1998 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்துடன் 2002 ஏப்ரல் மாதம் வரை ரூபா 662,575 வரை செலவிடப்பட்டுள்ளது. 2002 வருட இறுதி வரை முதல் மாடிக்கான கொங்கிரீட் தட்டம் கட்டப்பட்டு முதல் மாடியின் சுவர்கள் கட்டப்பட்டு இருந்தது. அத்துடன் மீதியான வேலைகள் மேற்கொள்ளப்படாமல் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. கட்டிடம் சுமார் 12 வருடங்களாக உக்கிய நிலையில் காணப்பட்டதால் சுற்றுப்புரத்தில் காடுகள் வளர்ந்து காணப்பட்டது என 2014 பெப்ரவரி 10 திகதி மேற் கொள்ளப்பட்ட இடப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அம்பகஹபிட்டிய விகாரைக்கு அண்மையிலுள்ள இடைப் பாதையை கொங்கிரீட் பண்ணுதல்

------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிர்மாண வேலைக்காக சபையின் தொழில்நுட்ப சேவை அலுவலரினால் ரூபா 300,000 இற்கான மதிப்பீடு ஒன்று தயாரித்து மாவட்ட பொறியியலாளரினால் 2011 ஜுன் 11 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது 2012 செப்டம்பர் 27 திகதி கிராமிய சமூர்த்தி அபிவிருத்தி சங்கம் ஒன்றுடன் ரூபா 300,000 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு 2013 செப்டம்பர் 30 திகதி ரூபா 258,926 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

இப்பாதை தொடர்பாக தொழில்நுட்ப சேவை அலுவலருடன் 2014 பெப்ரவரி 11 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாதையின் கனம் மி.மி. 125 இற்கு பதிலாக மி.மி. 100 என தொழில்நுட்ப சேவை அலுவலரின் சுயவிருப்பத்தின் பிரகாரம் செய்திருந்தது. அத்துடன் அதற்காக பூர்வாங்க அங்கிகாரம் பெற்றிருக்கவில்லை.

(ii) கனம் குறைவாக காணப்பட்டதன் காரணமாக பாதைக்கு ஏதேனும் சேதங்கள் ஏற்படின் அதனை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவைப்படும் செலவு குறிப்பிட்ட தொழில் நுட்ப சேவை அலுவலரிடம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்திடம் 50% வீதமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என நிபந்தனையின் கீழ் கொடுப்பனவு மேற் கொள்வதற்கு 2013 மே 02 திகதி பொறியியல் உதவியாளரினால் விதந்துரைக்கப்பட்டு மாவட்ட பொறியியலாளரினால் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) பாதையின் இரண்டு இடங்களில் கொங்கிரீட் உடைந்து காணப்பட்டமையால் இவ்விடங்களில் மீண்டும் கொங்கிரீட் போடப்பட்டிருந்து எனவும் பாதையின் மத்தியில் சுமார் 10 அடி அளவான வெடிப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிட்டின் பிரகாரம் பாதை செய்யப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்